**செய்தி வெளியீடு எண்:025** **நாள்:13.01.2021**

தொண்மையும் சொல்வளமும் நிறைந்த தமிழில் உள்ள அனைத்து சொற்களையும் ஒருங்கு திரட்டி ஒரே தளத்தின்கீழ் நிரல்படுத்தி இணைய பொதுவெளியில் உலக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் உயரிய இலக்கோடு தமிழ்நாடு அரசின் அகர முதலி திட்ட இயக்ககம் செயல்பட்டு வருகிறது. இந்த இயக்கத்தின் வாயிலாக கலைச் சொல்லாக்கம், தூய தமிழ் கலப்பில்லாமல் பேசுவதை ஊக்குவிப்பது போன்ற பல்வேறு செயல்பாடுகளை செய்து வருகிறது. கடந்த 2020–2021ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்களால் வெளியிடப்பட்டது. அவை தற்போது அரசாணையாக வெளியிடப்பட்டுள்ளது. அவைகளின் சுருக்கம் பின்வருமாறு:-

**1. <u>சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சி திட்டம்</u>**

இந்த இயக்ககத்தின் வாயிலாக கல்லூரி மாணவர்களிடையே சொல்லாக்க திறனை வளர்த்தெடுக்கவும், அவர்களின் தனித் தமிழ்பற்றினை ஊக்குவிக்கும் நோக்கத்தில், ''சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சி திட்டத்திற்கு'' ரூபாய் 2,04,600/– ஒதுக்கீடு செய்து தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (அரசாணை (நிலை) எண்.128, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை நாள் 30.12.2020) இத்திட்டத்தின் வாயிலாக மாணவர்களுக்கு இன்றைய காலத்தில் நாள்தோறும் பெருகிவரும் பல துறைசார்ந்த சொற்களுக்கு இணையான தமிழ் கலைச் சொற்களை உருவாக்குவதற்கு பயிற்சி வழங்கப்படும்.

**2. <u>தூயதமிழ்ப் பற்றாளர் விருது</u>**

நடைமுறை வாழ்க்கையிலும், தூய தமிழிலேயே பேசும் தனித்தமிழ் பற்றாளர்களுக்கு, மாவட்டத்திற்கு ஒருவர் என்ற வகையில் ஒவ்வொரு ஆண்டும் தமிழ் அகராதியியல் நாள் விழாவின்போது பாராட்டு சான்றிதழ் மற்றும் தூய தமிழ்ப் பற்றாளர் விருதுடன் விருது தொகையாக ரூபாய் 20,000 வீதம் வழங்கிட தமிழ்நாடு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்.129, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை நாள் 30.12.2020) இதற்கென ரூபாய் 7,40,000 நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**3. <u>தூயதமிழ் ஊடக விருது</u>**

தூய தமிழைப் பயன்படுத்தும் காட்சி மற்றும் அச்சு ஊடகங்களை ஊக்குவிக்கும் வகையில் **தூய தமிழ் ஊடக விருது** ஆண்டுதோறும் அகரமுதலி திட்ட இயக்ககம் மூலம் தமிழ் அகராதியியல் நாள் விழாவின்போது வழங்கப்படும். விருதுத் தொகையாக ஒரு

ஊடகத்திற்கு ரூபாய் 50,000 வீதம் ரூபாய் 1,00,000/– மற்றும் தங்க பதக்கத்திற்கு என ரூபாய் 50,000/– ஆக மொத்தம் ரூபாய் 1,50,000 தொகை ஒதுக்கீடு செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (அரசாணை (நிலை) எண்.130, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை நாள் 30.12.2020)

4. <u>நற்றமிழ்ப் பாவலர் விருது</u>

கவிதைப் படைப்புகளில் (மரபுக் கவிதை, புதுக் கவிதை) பிறமொழி கலப்பில்லாத தூய தமிழ் சொற்களையும், புதிய தமிழ்க் கலைச் சொற்களையும் பயன்படுத்தும், இரு பாவலர்களை ஊக்குவிக்கும் வகையில், **நற்றமிழ்ப் பாவலர் விருது** ஒவ்வொராண்டும் தமிழ் அகராதியியல் நாள் விழாவின்போது வழங்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் 50,000 வீதம் ரூபாய் 1,00,000/– மற்றும் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்க்கு என ரூபாய் 50,000/– ஆக மொத்தம் ரூபாய் 1,50,000 தொகை ஒதுக்கீடு செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (அரசாணை (நிலை) எண்.131, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை நாள் 30.12.2020)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**